# மாதர் மனோரஞ்சனி.

| VOL. 2. | MADRAS: MARCH 1900. | No. 1. |
|---|---|---|
| புத்த. உ. | சென்னை, 1900-௵ மார்ச்சு-௴. | இல. க. |

## பரோடா மஹாராணியும் பெண்கல்வியும்.

---

பம்பாய் இராஜதானிக்கு சேர்ந்த சுதேச இராஜ்ஜியமாகிய **பரோடா** தேசத்தரசராகிய **கயிக்வார்** மிகத் திறமையுடன் தனது தேசத்தை அரசாண்டு வருவதுடன் அங்கே கல்வி யபிவிருத்தியாவதற்கு அதிக பிரயாசை யெடுத்துக்கொள்ளுகிறாரென்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடும். அவருக்கு பிரதான மந்திரி யதிகாரத்தை வகித்து அத்தேசத்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்துவருகிறவர் நமது சென்னையைச் சேர்ந்த திவான் பகதூர் **ஸ்ரீனிவாசராகவையங்கார்** அவர்கள் என்பதும் தெரிந்திருக்கக்கூடும். ஆனால் சயிக்வார் அவர்களது மனைவியாராகிய **மஹாராணி** யவர்களும் வித்தையில் கற்று தேர்ந்த பெண்மணி யென்றும் பெண்கல்வி தமது இராஜ்ஜியத்தில் பரவுவதற்கு அதிக முயற்சி யெடுத்துக்கொள்ளுகிறாரென்பதும் எல்லோருக்கும் தெரிந்திருக்கமாட்டாது. பரோடா நகரத்து பெண்பாடசாலைகளின் மாணவிகளுக்கு பரிசு அளிக்கையில் அந்த மாதுசிரோன்மணி செய்த உபன்னியாசத்தை இங்கே பிரசுரிக்கிறோம். உயர்ந்த பதவியிலிருக்கும் ஸ்திரீகளெல்லாரும், இப்படியே வீண்காலம் போக்காமல் தாங்கள் கல்வி கற்பதுந் தவிர, தங்களவ்வளவு அதிஷ்டம் இல்லாத மற்ற ஸ்திரீகளுடைய கல்விக்காக தங்களாலியன்ற உதவி யளிப்பாரேயாயின், நமது நாடு எவ்வளவு சிறப்பையடையும். அந்த மகாராணியார் செய்த உபன்னியாசம் அடியில் வருமாறு :—

...யமுள்ள சகோதரிகளே! பெண்களே!

இன்றையதினம் இங்கே இக்கூட்டம் உங்கள் பொருட்டுத்தான் சேர்ந்திருக்கிறபடியால், இதைக் குறித்து நான் சொல்லும் சில வசனங்களை தயவு செய்து கேட்பீர்களாக. நாம் பூஜிக்கும் கிரந்தங்களில் ஒன்றாகிய ஸ்ரீ பகவத்கீதையில் அறிவிற்கு மேம்பட்டது ஒன்றுமில்லையென்று சொல்லியிருக்கிறது. ஆனால் அறிவைக் கல்வியாலல்லாது அடையமுடியாது.எனெ

னில் கல்வியே அறிவினது தாய். இம்மை மறுமை பாக்கியங்க ளெல்லா
வற்றையும் கல்வியினால்தான் அடையலாம். கல்விதான் "அறம்பொருள்
இன்பம் வீடும் பயக்கும்." அநேக இடங்களில் என்றும் குன்றாத கல்வி
யின் சொல்லொணாப் பயன்களைப் பரவச்செய்யப்பிரயத்தனம் செய்கிறார்கள்.
இந்த தேசத்தில் அநேக இடங்களில் செய்யும் பிரயத்தனங்களும் நமக்கு
தெரியவருகிறது. ஆனால் நமது மஹாராஜாவைப்போல் அவ்வளவு உதார
குணத்துடனும் ஆவலுட னும் அதற்கு உதவி யளிப்போர்கள் அநேகரி
ல்லை. நான் அவரது மனைவியாதலால் இப்படிச் சொல்லுகிறேன் என்று நீங்
கள் எண்ணக்கூடாது. அவர் இந்த விஷயத்தில் எடுத்துக்கொள்ளும்
பிரயாசை எல்லோருக்கும் மிக்க இன்பத்தைத் தருகிறபடியால்
அதைக்குறித்து பேசாமல் சும்மா இருக்க எனக்கு மனம் வரவில்லை.
எழுதல், படித்தல், தையல், சமையல் வேலை முதலிய விஷயங்களில்
இங்கே பெண்களெல்லோருக்கும் தர்மத்துக்கு படிப்பு கொடுக்கப்படுகிற
தென்பது எல்லாருக்கும் செவ்வையாய் தெரியும். தேச இராஜ்ய
பாரத்தில் வித்தை இலாகா என்று தனியாய் ஏற்படுத்தியிருக்கும்
இலாகாவிலிருந்து சர்க்காருக்கு வருமானம் ஒன்றுமில்லை யென்பதையும்
அது தேசத்தாருடைய நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது
என்பதையும் நீங்கள் செவ்வையாய் அறியவேண்டும். இப்படி ஒப்பில்லா
உதார குணத்துடன் பொது நன்மையையே பாராட்டி பெண்கல்விக்காக
மஹாராஜா எடுத்துக்கொள்ளும் இவ்வளவு பிரயாசைக்கு நீங்கள் மாத்திர
மல்லாது இன்னும் உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாருங்கூட மிகக்
கடமைப்பட்டவர்களா யிருக்கவேண்டியது. ஏனெனில் ஓர் சிறு தானியத்
திலிருந்து கணக்கில்லாத தானியப்பூட்டைகள் உண்டாவதுபோல், படித்த
ஓர் தாய் வயிற்றிலிருந்து அநேகம் பிள்ளைகள் பிறந்து அறிவும் நல்லொழு
க்கமும் அவள் முலைப்பாலோடு குடித்து தங்கள் தேசத்துக்கு சிறப்பை
யுண்டாக்கி அதை முன்னுக்கு கொண்டுவருகிறார்கள். மகாராஜா அவர்கள்
அதிக ஆவலும் பிரயாசையும் எடுத்துக்கொண்டதனால்தான் நமது தேசத்
தில் இவ்வளவு நல்ல பலன் உண்டாயிற்றென்பது நிஜமே. ஆனாலும் அவ
ருக்கு உதவிசெய்வோர் இல்லாவிடில் இவ்வளவு ஜயமடைந்திருக்கமா
ட்டார். வேலைக்காரன் எவ்வளவு திறமையுள்ளவனானபோதிலும் தகுந்த
கருவிகளில்லாவிட்டால் நல்ல வேலை செய்ய முடியாது. அவனுடைய
மையும் சிறக்காது. பெண் பாடசாலைகளுக்கு சூபரின்டெண்டு ஆ
(Miss. Sorabji) மிஸ் சுராப்ஜி அம்மாள் தனது முழுமனதையும் செலு
த்தி ஊக்கத்துடன் உழைப்பது மிக மேன்மையானது. அது எனக்கு நிறை
ந்த திருப்தியைக் கொடுக்கிறது. அந்த அம்மாளை இந்த விஷயத்தில் எவ்வ
ளவு ஸ்துதி செய்தாலுந்தகும். இப்பேர்க்கொத்த சிறப்பும் அபூர்வமான தரு

ணம் இனிமேல் வாய்த்தலரிதாகையால், அதை நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். கிளியைப்போல ஏதோ இரண்டு வார்த்தை பிதற்ற தெரிந்தால் அது கல்வியாகாது. வெறுங் கல்வி மாத்திரமிருந்தாலும் பிரயோசனமில்லை. உங்களது தினசரி நடவடிக்கைகளில் நீங்கள் புஸ்தகங்களில் படித்தறிந்துகொண்ட அறிவின்படி நடந்துகொள்ளாவிட்டால் அந்த வித்தை ஒன்றுக்கும் பயனில்லை. இரத்தினத்தைபதிக்கவேண்டிய இடத்தில் பதித்தால் அதன் ஒளி விளங்குமேயல்லாது, அதை சும்மா வைத்துக்கொண்டிருந்தால் அதன்பிரகாசம் தோன்றுது அதுபோலவே படிப்பை மாத்திரம் வைத்துக்கொண்டு ஜனங்களிடம் அன்பு, மரியாதை, விசுவாசம், காட்டாமல் கணவனுக்கும் மற்றெல்லோருக்கும் நமது கடைமைப்படி நடக்காவிட்டால், அந்த படிப்பினுல் ஒரு பயனுமில்லை. மேற்சொன்ன குணங்கள் தான் படிப்புக்கு ஒளியைத் தருகின்றன. பழம் நிறைந்த விருக்ஷம் கண்ணுக்கு ரம்மியமா யிருக்கிறது; அதேமாதிரி கல்வியும் நல்லொழுக்கமும் நிறைந்த ஸ்திரீ பார்ப்போர் மனதில் சந்தோஷம் உண்டுபண்ணுகிருள். படித்த ஸ்திரீகளெல்லாம், தங்கள் கணவர்களிடத்து அன்பு பாராட்டி தங்கள் பிள்ளைகளைச் சன்மார்க்கத்தில் கொண்டுவருவார்களானுல், பெண் கல்விக்கு விரோதமாய் எவரும் ஒரு சொல்கூட சொல்லமாட்டார்கள். படிப்பின் நற்குணங்களைத் தெளிவாயறிந்தால் யார்தான் அதை ஆவலுடன் அனுசரிக்கமாட்டார்கள்? இதுதான் மற்ற தேசங்களில் பெண்கல்வி விருத்தியடைவதற்கு காரணம். இதரதேசத்தார் அநேகருள் செவ்வையாய் வித்தைகற்ற ஸ்திரீகள் தங்கள் குடும்பத்தைப் பாதுகாத்து தங்கள் கணவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் செய்யவேண்டிய கடைமைகளைச் சரியாய் செய்வதனுல் ஜனங்களால் பூஜிக்கப்படுகிறதை நான் கண்டுமிருக்கிறேன் கேட்டுமிருக்கிறேன். நாமும் அதே மாதிரி நடந்து கொள்ளவேண்டும். உயர்ந்த ஸ்திதியிலிருக்கும் ஸ்திரீகளுக்கு ஒருவார்த்தை சொல்லுகிறேன்—உங்களுக்கு ஏராளமாய் சாவகாசமிருக்கிறது. அதை நீங்கள் வீணே கழிக்காமல் புத்தியாய் கழிக்க மனங்கொள்வீர்களானுல், படிப்பைப்போல உங்களுக்கு உபயோகமுள்ளது வேறென்றும் அகப்படாது. அது என்னுடைய அனுபவத்திலிருந்து எனக்கு தெரியும். அது உங்களுக்கு சந்தோஷமும் அறிவையும் கொடுப்பதோடுகூட உங்கள் மனதையும்சுத்தப்படுத்தும். வித்தை கற்ற சில ஸ்திரீகள் வீட்டுவேலை செய்வது தங்களுக்கு குறைவு என்று நினைக்கிருர்கள். ஆனுல் அவர்கள் தலைமுழுதும் கர்வங்கொண்டு, சரியல்லாத காரியங்களைச் செய்கிருர்கள். இதனுல் தான் சில புருஷர்கள் பெண்கல்வி கூடாதுஎன்கிருர்கள். இதுதான் பெண்கல்விக்கு பெரியஇடையூறு. ஆகையால் இப்படிக்கொத்த அபாயங்களை நீங்கள் நீக்கிநடப்பீர்களெ

ன்று நம்புகிறேன். நமது தேசத்தில் சீதை, திரௌபதி முதலிய ஸ்திரீகள் படித்திருந்தபோதிலும் தங்கள் புருஷர்களுக்கு நல்ல மனைவிகளா யிருந்து புகழ்பெற்றிருக்கிறார்கள். இப்படிக்கொத்த ஸ்திரீகள் மற்ற தேசங்களில் இல்லை. ஆகையால் நீங்களும் அவர்களைப்போலவே கற்பையும் நல்லொழுக்கத்தையும் அனுசரித்து நமது தேசம் முன்னடைந்த புகழைத் திரும்ப அடையும்படி கொண்டுவருவீர்களாக!

---

## கோலாட்டம் கும்மிகளுக்கு உபயோகமான திருச்செந்தில் தரிசனக்கண்ணி.

---

(முன்தொடர்ச்சி.)

வழியெளிதாய்க்கடக்க—ஆண்டவன்
வரலாறுனக்குப்பெண்ணே
மொழிகுவன் சுருக்கமாயானந்தமாய்க்கேளு
முத்தமுறுவன்மின்னே. (௰சா)

ஆதியிற்ப்ரும்மபுத்ரன்—தக்கனென்போன்
அகங்காரப்பேய் பிடித்து
மாதுமைபாகனை மகதேவதேவனை
மதியாமல் யாகஞ்செய்தான் (௰எ)

இந்திரன் மால் பிரமன்—அமரர்கள்
யாவரும் வந்திருந்தார்
செந்துவர் வாயுமை தந்தை மகங்காணச
சென்றனள் சாலைபுக்காள் (௰அ)

கண்டும் வாவென்று சொல்லான்—அம்மைமுகங்
காணக்கண் கூசிப்பெண்ணே
பண்டுதனக்குப் பெருஞ்செல்வந்தந்தாளைப்
பாராது போலிருந்தான், (௰கூ)

அண்டமளித்த செல்வி—கொடியவன்
அறியாமை கண்டிரங்கிப்
பண்டு நெடுந்தவ நீசெய்துபெற்றவிப்
பாக்கியம்போய்விடுமே (உ0)

அப்பனே சொல்லுவன்கேள்—அரன்பகை
யாகாது நிச்சயமே
முப்பரம் பொருளுக்கு முன்னவன் பகைகொண்டால்
முடிவது சத்தியமே. (உக)

என்றம்மை சொன்னசொல்லை—மதியாம
லிருந்தானே பாதகனும்
அன்றங்கிருந்தவமரர்கள் யாவரும்
அவனுக்கடங்கி நின்றார். (உஉ)

கண்டுமனங்கருகிச்—சகந்தந்த
காரணிகைலை சென்று
துண்டமதிபுனை சோதிபொற்றாள் சென்னி
சூடியென்னாண்டவனே. (உங)

தக்கன்செய்வேள்விதன்னைத்—தகர்த்தங்கு
தான்வந்ததேவரொடும்
மிக்கவன்சென்னியை வெட்டிச்சிதைத்துன்றன்
வீரஞ்செலுத்துகென்றாள். (உச)

ஆண்டவனப்பொழுது—வீரபத்ர
னுப்மகச்சாலைபுக்கு
மூண்டமர் செய்திமையோருடன்தக்கனும்
முடியமுடித்துப் பின்னர். (உரு)

முக்கண்ணன் றன்னருளால்—மடிந்தோரை
முன்போலெழுப்பிவிட்டான்
தக்கன்றலை யங்கே காணுமையாலாட்டுத்
தலைவைத்தெழுப்பிவிட்டான். (உசா)

தன்னிலைகண்டதக்கன்—மதிகெட்டோம
சாமியை நாமறந்து
என்னவருந்தித் தவம் புரிந்தீறிலா
வின்பநிலையினின்றான். (உஎ)

தக்கன் மகத்திருந்த—கொடும் பாவம்
தன்னாலே தேவரெல்லாம்
மிக்கொடுஞ் சூரனுக்கினைக் குட்பட்டு
மெலிந்தார் பலயுகங்கள். (உஅ)

இந்திரன்போ யொளித்தான்—மால்மன
மேங்கிக் குலேந்து நின்றுன்
சந்தமறைப் பிரமாவசுரேசனேச்
சார்ந்து பஞ்சாங்கஞ் சொல்வான். (உகூ)

பட்டபாடென்ன சொல்வேன்—இமையவர்
பரிதாபங் கண்மணியே
கெட்டமதி கொண்டதுட்டருக்கித்துயர்
கிடைப்பது ஞாயம்பெண்ணே. (ஙு0)

தேவகுஞ்சரியம்மாள்.

## சென்னேச் சித்திரக்காட்சி.

சென்னேயில் சென்ற பிப்ரவரிமீ 17ம் தேதி முதல் 25ம் தேதி வரையில் கலசமகால் என்று சதாரணமாய் பெயர் வழங்கிவரும் சேனட் அவுசில் (Senate House), ஓர் அற்புதமான சித்திரக்காட்சி நடந்தது. இதற்கு சென்னே இராஜதானியிலும் பம்பாய் இராஜதானியிலும் பேர்பெற்ற சித்திர வேலேக்காரர்கள் தங்களுடைய சிறந்த படங்களே அனுப்பினுர்கள். அவர்களிற் சிலருக்கு பரிசு கிடைத்தது. மற்றவர்களுக்கு பரிசு கிடைக்காவிடினும் அவர்களது படங்கள் மெச்சப்பட்டன. பொதுவாய் பார்க்கு மிடத்தில் எல்லாப்படங்களும் சிறந்தவைகளாகவே யிருந்தன.

இந்தக்காட்சியைப்பார்க்க ஜனங்கள் அநேகம்பேர் வந்திருந்தார்கள். இதைக்குறித்து **மாதர்மனோரஞ்சினியைப்** படிப்போர்க்கு சுருக்கமாய் கொஞ்சம் இங்கு சொல்வோம். சர்க்கரையின் உருசி அதைத்தின்றுலொழிய அதைச்சொல்லால் விவரித்தால் புலன்படாததுபோல் சித்திரத்தினழகு அதைக் கண்ணுல் கண்டு களித்தாலொழிய அதை வர்ணித்தால் தெரியாது. ஆகையால் இங்கே நாம் என்ன சொன்னபோதிலும் காட்சியைக் கண்ணுல் காணுவதா லுண்டாகும் பலனேயுண்டாக்க முடியாது. ஆனுல் இந்தத்தடவை காட்சியைப் பார்க்காதவர்களுக்கு மறுவருஷம் அதைப்பார்த்து களிப்படையவேண்டு மென்ற ஆசையை நாம் புகட்டினுல் அதுவே போதுமானது. சித்திரம் பார்த்து அகமகிழ்ச்சியடைவதற்கு மிகப்பயிற்சி வேண்டியிருக்கிறது. ஒன்றும் தெரியாத மூடர்களுக்குச் சித்திரக்காட்சி காட்டுவது செவிடன் காதில் சங்கு ஊதுவதற்கு சமானமாயிருக்கும். நம்முள் எவ்வளவு பேர் தெருவில் விற்கும் **கிருஷ்ணர் படம் இராமர் படம்** என்ற பலவிதமான தடித்தடியாய் கை

யும் காலும் கொண்டு சுபாவத்துக்கு விரோதமாயும் களையற்றுமிருக்கும் படங்களை மிகச்சிரேஷ்டமாக மகிழ்ந்து கொண்டாடுகிறார்கள்? நல்ல சித்திரத்துக்கு அடையாள மென்னவென்றால் அதை நாம் உற்றுப்பார்த்தால் நிசமான உருவமே நமக்கு எதிரே வந்து நிற்பதுபோலிருக்கவேண்டும். வெளிச்சமும் நிழலும் சரியானபடி தெரிவித்திருக்கவேண்டியது. பார்ப்போர் மனதில் இந்த பாவங்களை உண்டாக்கக்கூடியவன் தான் நல்லவேலைக்காரன். இதற்காகத் தான் வர்ணத்தைத் தகுந்தபடி உபயோகப்படுத்துவார்கள். அதில்லாமல் அதிக வர்ணம் உபயோகப்படுத்தியிருந்தால் அது தான் நல்ல சித்திரம் என்று அநேகர் எண்ணுவார்கள். அது தப்பு. அது எப்படியெனில் அதிக நகைகள்அணிந்துக்கொள்வதனால் சில ஸ்திரீகள் மிக அழகுபொருந்தியிருக்கிறதாய் எண்ணிக்கொள்ளுகிறார்களே அப்படிதான். சித்திரத்துக்கு வர்ணமும் மனிதருக்கு ஆபரணமும் தக்கபடி சேர்த்தால் சுபாவமான அழகை எடுத்துக்காட்டும். மிதம் மீறிச் சேர்த்தால் இருக்கிற அழகையுங்கெடுத்துவிடும்.

இது நிற்க, சித்திரக்காட்சியிலுள்ள படங்களைப் பொதுவாய் நான்கு பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவன. (1) வர்ணமிடாமல் பென்சல் பேனா முதலியவைகளால் எழுதப்பட்டவை (2) எண்ணெயிற் கலந்த வர்ணமிட்ட படங்கள் (3) நீரிற் கலந்த வர்ணமிட்ட படங்கள். (4) போடகிராபுகள். முதல் மூன்று வகுப்புகளிலுள்ள படங்களை யெழுதுவதற்கு அதிக யுக்தியும் பயிற்சியும் சாதுரியமும் வேண்டும். ஏனெனில் அவை முழுதும் கையினாலேயே ஆகப்பட்டவை. இந்த முதல் மூன்று வகுப்புகளில் மொத்தமாய் 217 படங்கள் காட்டப்பட்டிருந்தன. ஐரோப்பிய மாதர் அநேகம் படங்கள் எழுதியிருக்கிறார்கள். புருஷர்களும் எழுதியிருக்கிறார்கள். சுதேசிகளுக்குள் எழுதினவர்களிலெல்லாம், (Miss Somiah) மிஸ் சோமய்ய என்ற ஓர் பெண்ணைத்தவிர மற்றவர்களெல்லாம் புருஷர்கள். நமது மாதர்களும் சித்திரம் எழுதப்பயில்வார்களா? முற்காலத்தில் சித்திரம் எழுதத்தெரிவது நமது மாதர்களுடைய குணங்களிலொன்றாயிருந்தது. அந்நிலைக்கு நாம் பழயபடி ஏன் வரக்கூடாது? வர்ணமிடாமல் மசியினாலேயே எழுதப்பட்ட படங்களுள், (Mrs Longfield) மிஸ்ஸஸ் லாங்குபீல்ட் என்ற மாது சிம்லாவிலுள்ள சில கட்டடங்களை யெழுதியிருக்கிறார். அவை மிகவும் வியக்கத்தக்கன வாயிருக்கின்றன. எண்ணெய் கலந்த வர்ணமிட்ட படங்களுள் ரவிவர்மா என்ற பெயர்பெற்ற சித்திர வேலைக்காரரால் எழுதியவை தான் மிக சிரேஷ்டமானவைகளாக தோன்றுகின்றன. இவைகளுக்குள் முதற்பரிசு பெற்ற படத்திற்கு "முழுகிக் குளிர்ச்சியடைவேன்" என்று பெயர் இட்டிருக்கிறது. இது ஒரு மலையா

## புற்புலத்து நெட்டிலிங்கமையார் வைபவம்.

### பெருஞ்சீரகவல்லி.

நமது தென் இந்தியாவில் பெருஞ்சீரகவல்லி என்னும் ஜில்லா அங்கிலேயர் ஆளுகைக்குள்ளடங்கியிருப்பது அநேகருக்குத் தெரியாதாகையால் அந்நாட்டைப்பற்றி இங்கு முதல் முதல் வருணிப்போம்.

இப்பெருஞ்சீரகவல்லி மூன்று நான்கு தாலூக்காக்களடங்கிய அலங்காரமான ஜில்லா. இதன் மத்தியில் இந்த ஜில்லாவுக்கே அலங்காரபூதமாய் இந்த நாட்டை கொழிக்கச்செய்கின்றதான பொன்னி என்னும் மகாநதி அகண்ட காவேரிக்கு ஒப்பாய் வருஷம் 365 நாளும் ஸதா ஜீவந்தியாய் பிரவஹித்துக்கொண்டிருக்கும். இந்நதிக்கரைகள் இருபக்கங்களிலும் ஆரியர்கள் முதல் முதல் தேசவளத்தை நன்றாயறிந்து குடிஏறினபடியால் அவர்களால் கட்டப்பட்ட அநேக சிவாலயங்கள் விஷ்ணுவாலயங்கள் ஆகாயத்தை அளாவும் கோபுரங்கள் மதில்கள் இவைகளெல்லாம் பார்ப்பவர்கள் கண்ணைக் கவரும்படி விளங்காநிற்கும். இப்பொன்னி என்னும் நதியானது இந்த ஜில்லா மத்தியில் இரண்டாகப் பிரிந்து 10, 15 மைல் தூரம் இரண்டு பெரிய நதிகளாக ஓடி மறுபடி ஒன்றாய்க்கூடும். இப்படி நதிக்கால்களால் உண்டான தீவுக்கு சிரகதீவு என்று பெயர். இந்தத் தீவின் அலங்காரத்தை இன்று முடிய சொன்னாலும் சொல்லுகிறவனுக்கும் சலிக்காது ; கேட்கிறவனுக்கும் ஆவல்குறையாது.

### சிரகத்தீவின் ஆலயங்கள்.

இந்தத்தீவிற்மூன் பெரியஆலயங்கள்கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்கள் பழையகாலத்தின் வாஸ்துசாஸ்திரங்களுடைய அத்தாட்சிகளாகவும், நமது மதக்கொள்கைப்படி வெகு புராதனங்களாகவும் விளங்குகிறபடியால் காச்மீரம், நேபாளம், கன்னியாகுமரி, ஜகன்னாதம், ஸகியாத்ரி முதலான பிரதேசங்களிலிருந்து தினந்தோறும் ஜனங்கள் வந்து போய்க்கொண்டேயிருப்பார்கள். சிரகத்தீவின் கோவில்களில் நித்தியம் உத்ஸவம் நடந்துகொண்டேயிருக்கும். கோவிலைக் காத்துக்கொண்டே அவ்விடத்திய பிராமணர்கள் ஒருவித வேலையுமில்லாமல் கொழுத்து சுவாமி தரிசனம்பண்ண வருகிறவர்களுடைய பணத்தைக் கவருவதைவிட வேறு தொழிலில்லாதவர்களாய் சுகித்துத் திரிவார்கள்.

### ஆரணியங்கள்.

ஆலயங்களிருக்கும் இடங்களைவிட்டு அந்தத் தீவின் மற்ற இடங்களைப் போய்ப்பார்த்தால் அப்பொழுதுதான் ஈசுவர சிருஷ்டியி லிவ்வளவு

அழகு முண்டாவென்று மனங்களிப்படையக்கூடிய விஸ்தாரமான சோலைகளும் அரணியங்களும் மனதை ஆனந்தப்படுத்தும். அவ்வரணியங்களில் விதம் விதமான குரங்குகள், மான் முதலியமிருகங்கள், மயில் முதலிய பட்சிகள் சுயேச்சையாய் குதித்துக் குலாவி ஆடிப்பாடித் திரிந்துகொண்டிருக்கும். சிற்சில சமயங்களில்மனிதன் தனியாய்ப்போனால் மர்க்கடங்கள் அவனைத் துரத்தும். தலையில் மூட்டை முதலியவைகளில் தின்பண்டங்கள் எடுத்துப்போனால் அவைகளைப் பிடுங்கிக்கொள்ளும். நல்ல படுகை மண்ணில் மரங்கள் கொழு கொழு என்று செழிப்பாக வளர்ந்து தழைத்திருக்கு மாகையால் பகலினுங்கூட இருட்டாகவிருக்கும். ஜனங்களுக்கு எற்பட்டிருக்கும் வழியைவிட்டு கொஞ்சம் விலகினால் பெரிய மலைப்பாம்புகள் கலியின் சடைகள்போல் படுத்திருக்கும். அங்கங்கு சிறு ஓடைகள் காடை யிறகுபோன்ற நீர்நிரம்பி ஸ்ரீ கேசவன் திருமேனிக் கொப்பான நீலோத்பலங்களாகிய ஆயிரங்கண்களால் பார்ப்பவர்கள் இருகண்களைச் கவர்ந்துகொண்டும் அவர்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டும் விளங்காநிற்கும். கோவை, சிந்து முதலிய கொடிகள் பெரிய விருட்சத்தைவிட பருத்த உடலுடன் படர்ந்து அநேக மரங்களில் ஓடியிருக்கும். அதைப் பார்த்தால் கொடிகளுக்கும் இவ்வளவு செழிப்பு உண்டா என்று நமக்கு வியப்புண்டாகும். ஆற்றங்கரையோரமாய் வந்துவிட்டாலோ ஒரே வெளுப்பாய் சரத்கால சந்திரிகைபோலும், தெய்வ வெண் திருநீறுபூசியகைலாயவாசியின் திருமேனிபோலும் நாணற் பூப்பூத்து ஒரே வெளுப்பாய் காணப்படும். ஒருக்கால் பொன்னி என்னும் பெரிய ஸுமங்கிலியின் நரைத்த கூந்தலோஎன்றும் சந்தேகிக்க இடமாகும்.

## கிராமங்கள்.

சீரகத்தீவில் ஆலயங்களும், அரணியங்களும் மட்டுந்தான் அழகு என்று எண்ணிவிடவேண்டாம். இவைகளில்லாத மற்ற இடங்களில் செழித்த கிராமங்கள் பல உண்டு. அவைகள் பொன் விளையும் பூமிகள். வருஷம் முப்போகம் மாசூல் நடக்கும். ஜலத்துக்குக் குறைவேயில்லை. புலங்களில் வியவசாயம் பண்ண ஏர் எறு என்பவை ஒன்றும் வேண்டாம். வருஷந்தோறும் பொன்னியின் வெள்ளத்தில் வரும் வண்டல்களே நிலங்களுக்கு பலமான உறம். அவ்வண்டல்கள் படிந்த பூமியை உழவும் வேண்டுமா! தீவுக்கு இருபக்கங்களிலும் மகாநதி ஓடும்போது ஜலத்துக்கு என்ன குறைவு! இவ்வியவசாயத்தில் சிரமம் ஏது! ஆகையாலங்கு இருக்கும் வேளாளர்கள் கொஞ்சமேனும் அலுப்பு என்பதே யில்லாமல் நாத்து

நடவு, முதலிய பயிர்த்தொழில் செய்து தானியங்களை மற்ற இடங்களை விட 10 மடங்கு அதிகமாக வாரிக்கொட்டி விற்று பணம் சம்பாதித்து வாழ்வார்கள்.

## தேசப்பிரிவுகள்.

### வள்ளி நாடு.

சீரகத்தீவைப்பற்றியும் பொன்னியின் பிரயோசனத்தைப்பற்றியும் இவ்வளவு தூரம் சொன்னோம். பொன்னிநாடு என்பது இத்தீவின் முதல் தாலூகா. பொன்னியைப் பற்றிச்சொல்லும் பொழுது நாம் ஒருவாறு இத் தாலூகாவை வருணித்துவிட்டோம். மற்றொரு தாலூகாவாகிய வள்ளி மலை நாட்டை யிங்கு எடுத்து இப்போது சொல்லுவோம். வள்ளிமலை யைப் பார்த்தால் இது பொன்னி பிரவகிக்கும் சீரகவல்லியில் ஒரு தாலூகாவா என்று ஜனங்கள் வியப்படையக்கூடிய அவ்வளவு வேறான பிரதேசமான மலைநாடாக விருக்கும். வள்ளி நாட்டின் ஒரு பாகம் எங்கு பார்த்தாலும் கல்லும் காடும் முள்ளும் புல்லும் கள்ளியும் சப்பாத்துமாக விருக்கும். மலைகள் உன்னதமாய் இருக்குமிடங்களில் பச்சைப் படுக்கை பூமியில் விரித்ததுபோல் நன்றாய்ப் புல் நிறைந்த மைதானவெளிகள் பார்ப்பவர்கள்கண்களைக் குளிரப்பண்ணும். இன்னும் மேலே போகப்போக தேக்கு, வேங்கை, நாக்கம் முதலிய மரங் கள் ஆகாயத்தைத் தாங்கும் ஸ்தம்பங்கள் போல் நிற்கும். வண்டுகளால் ஓட்டைவிடப்பட்டு காத்தடிக்கும்போது வள்ளி நாட்டின் வைபவத் தை வாசிக்கும் புள்ளாங்குழல்கள் போன்ற மூங்கிற் காடுகள் ஒரு மலையில் கண்ணைக் கவரும். வெய்யிற் காலங்களில்சாயங்காலத்தில் சிலவேளை இம் மூங்கிற் காடுகளில் சில தீப்பட்டு ஒரே வெளிச்சமாய் எரியும். நமது ஜம்பூத்தீவில் முதல்தரமான மூங்கிலரிசி இந்த வள்ளிமலையிற்றான் உண் டாகின்றது. அதை அங்கிருக்கும் மலசர்கள் என்ற ஓர் மலை சாதியார் தேனிற்சேர்த்து சமைத்துப் புசிப்பார்கள். இது வெகு ருசியும் புஷ்டியுமான ஆகாரம். இம்மலைத் தாலூகாவின் உஷ்ண பிரதேசங்களில் தென்னை, மா, பலா, நாரத்தை, எலுமிச்சை முதலான பழவர்க்கங்கள் வெகு அதிகம். நன்னாரி, குருந்தொட்டி, சுண்டை, முசுமுசுக்கை, விஷ்ணு கிராந்தி முதலான ஒஷதிவர்க்கங்கள் வெகு அதிகம். மலைநாட்டடில் ஜனங் கள் கொஞ்சமாகையாலும் மலையின்மேல் பழங்கள் அதிகமாகப் புசிப்பது உடம்புக்கு சௌக்கியமில்லை யாகையாலும் அவ்விடத்திலுண்டாகும் கனிவர்க்கங்கள் சீரகவல்லி ஜில்லாவில் வந்து மடியவேண்டும். வள்ளி மலையில் வாசம்பண்ணின ஒவ்வொருவனுக்கும் 1 வருஷத்திற்கு 3-மாதம்

ஆயுள் அதிகமாகிறது என்பது ஜனங்க
அவ்வளவும் உண்மையே. இவன் ஆயுளை அதிகப்
தேசத்தின் ஓஷதிகள்மேல்பட்ட காற்று ஒன்றே
மேல் நடக்கும்போது காலால் மிதிக்கப்பட்ட புற்களும
வாசனையை வீசும். பார்த்த விடமெல்லாம் ஸ்தலாரவிந்தம்
ரோஜாப்பூ நிறைந்து என்னை கொஞ்சம் பறித்து நீ சுகப
என்று நம்மை கெஞ்சிக் கேட்பதுபோல் எங்கும் ஏராளமா யிருக
கனிவர்க்கங்கள் வேண்டியமட்டும் ஒருவருடைய தயையில்லாமல் நமது
தேக சௌக்கிய மிடங்கொடுத்தமட்டும் நாம் சாப்பிடலாம். சில சமயத்தில் அதிக நடையால் கொஞ்சம் களைப்படைந்து ஒருவனஸ்பதியின் கீழ் நாம் உட்கார்ந்தால் ஒரு சிறு காற்று சிலு சிலு என்று அடிக்கும். அப்பொழுது அம்மரத்திலிருந்து ஒருவண்டிப் புஷ்பம் நமது மேனியை மூடும். சண்பகம், விசேஷமாய் வெண்சண்பகம் அவ்விடத்தில் வெகு ஜாஸ்தி; கிழக்கே பார்த்தால் பெருந்தோட்டங்கள், அருவிகள், மேற்கே பார்த்தால் பூர்ணகும்பம்போலும், பொரிவிளாங்காய் போலும் உருட்டிதிரட்டி வைக்கப்பட்டமலைகள். தெற்கே பார்த்தால் கடகடவென்றும், சோவென்றும் விழப்பட்ட அருவிகள், மலையாறுகள்; வடக்கே பார்த்தால் கறுத்த மேகங்கள், மழை ; ஒரு சிகரத்தில் மஞ்சு, அதற்கு எதிரில வெய்யில்; ஒரு சிகரத்தில் காடு, மற்றொன்றில் ஒரு துரும்புகூட இல்லாத பொட்டல் ஒரு குன்று கல்லு, மற்றொரு குன்று முள்ளு, இவ்வித பற்பல காட்சியால் அங்கு ஆனந்தமனுபவிப்பவன் மனம் பூரித்துப்போவான்.

## அரணியநாடு.

பெருஞ்சிரசவல்லியின் மூன்றாவது தாலூகா அரணியநாடு. அதில் விசேஷமாய் காசாங்காடுகள் 40 மைல் நீளம் 30 மைல் அகலம் விஸ்தாரமுள்ளவைகளாக அங்கங்கு கிராமங்களுள்ளதாகவிருக்கும். நிலம் செம்மண் நிலம். பாம்பு, பூரான், மான், மயில், கௌதாரி, கருடன், செந்நாய், நரி இவைகளுக்கு இக்காசாங்காடுகள் இருப்பிடம். சலங்கைப்பூரான் என்ற ஒரு கொடிய விஷப்பூரானிவ்விடத்திய அரணியங்களில் உண்டு. வாஸத்துக்கு இந்த பாக மவ்வளவு யோக்கியமில்லாததாயினும், இதிலுமநேக கிராமங்களும் குடிகளும் உண்டு. காட்டில் கொஞ்ச விலைக்கு விறகு பிடித்து வியாபாரம் பண்ணி பணம் சம்பாதித்து பிரபலமானவர்கள் பலபேர்களிவ்விடமுண்டு. இந்த தாலூகாவை இவ்வளவுடன் நிறுத்துவேண்டும்.

## களிநாடு.

...வருரு தாலூகா களிநாடென்று பெயர்பெற்றநாடு. ...கத்தில் வெகுசிலாக்கியமான பாகம்; இந்தஜில்லாவுக்கே ...திரம். இந்தபாகத்தில் களிமண் வெகுசெழிப்பாகையால் ...டுகிறமட்டும் வாழைத் தோட்டங்களும் தென்னஞ்சோலைக ...கு அதிகம். வெகு நிழற்பாங்காகிய நாடாகையால் வெய்யில் என் ... கொடுமையை இவ்விடத்திலிருப்பவர்கள் ஒருநாளும் அனுபவித்த ...தயில்லை. காதத்துக்குக் காதம் தோட்டங்கள்தான் இந்த பாகத்தின் முக்கிய சிங்காரம். வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினவன் ஒரு தென்னங் குலையோ அல்லது வாழைத்தாரோ கையில் பிடிக்காமல் வீடுவந்த நாளே யில்லை. ஒரே வரிசையில் 5000, 10000-க்கணக்காய் நடப்பட்ட வாழைக ளையும் அம்மாதிரி வரிசை ஆயிரத்துக்குக் குறையாத தோட்டங்களையும், ஒன்றுபோல் ஒரே உன்னதமாய் பார்த்தால் கண்கள் கூசும் உயரமாய் வள ர்ந்திருக்கும் தெங்குகளையும் இவ்விடத்தில்தான் காணலாம். ஒவ்வொரு மைல் தூரத்தில் ஊருகள், ஒவ்வொரு நாழிகை வழிக்கொரு ஆலயம், ஒவ்வொரு கூப்பிடு தூரத்தில் ஒரு வாய்க்கால் எங்கேயாவது கண்டதுண் டோ என்றால் அவைகள் இக்களி நாட்டிற்றான்.

## பிரதான நகரம்.

இவ்வாறு பொன்னிநாடு, வள்ளிநாடு, அரணியநாடு, களிநாடென்ற நான்கு தாலூகாக்கள் பெருஞ்சிரகவல்லியிலிருக்கின்றன. அந்த ஜில்லா வின் முக்கிய...பட்டணத்தின் பெயர் பெருஞ்சிரகவல்லியேயாம். தன்னிடத் திலிருக்கும் நான்கு நாடுகளின் அடையாளமோவென்று ஜனங்கள் எண் ணும்படி அந்த ஊர் விளங்கிற்று, அந்த நகரத்தின் மேற்புறத்தில் அன்னை யும்நீ என்று பெயருள்ள ஒரு பெரும்பாறை சுமார் 2000 அடி உயரம் நில மட்டத்திலிருந்து நின்றுகொண்டு வள்ளிமலை நாட்டின் அடையாளம் நான் என்று சொல்லுவதுபோல விளங்குகிறது, அன்றியும் வெறும்பாறையா யிராமல் அதின் உச்சியில் ஒரு அழகான கோயிலையும்வல்லவ அரையர்கள் 1500 வருஷ.காலங்களுக்கு முன் அங்கு கட்டிவைத்திருக்கிறார்கள். அதின் மேல்போய் நின்று பார்த்தால் அந்த பட்டணம் மட்டுமல்ல, அந்த ஜில்லா முடியஒருவனுக்கு அவன் கண் முன்னிலையில் வந்து நிற்கும். அந்நகரத்தின் வடபுறத்தில் பொன்னிநாட்டுக்குப் பெயரளிக்கும் பொன்னி மகாநதியே வடயெல்லையாக விளங்குகிறது. பட்டணத்தின் அருகாமையில் பொன்னி யின்பலத்தைக்கூட இலட்சியம்பண்ணுமல்அந்நதிக்கரையில் ஜனங்கள்கருங் கற்களால் வீடுகட்டிக்கொண்டு வாழும் விசித்திரம் ஒன்றே போதும். அந்நகரத்தின் அழகை எடுத்துக்காட்ட அவ்வூரின் கீழ்பாகத்தைப் பார்த்

தால் களிநாடு இதுதானோ என்று சொல்லும்படியான தோட்டங்களும் துறவுகளும் விந்தையாய் விளங்கும். தென்புறம் சென்றுவிட்டால் பெரும் பொட்டல்களும், பனங்காடுகளும், புல்லுங்கூட இல்லாத பாலைவனங்களும், அரணியநாடு இங்குதானே ஆரம்பித்துவிட்டது என்று ஐயமுறுத்தும்படியான விஸ்தாரத்துடன் காணப்படும்.

நகர் சிறப்பு.

இவ்விதமாய் அப்பட்டணம் குபேரன் பட்டணம் என்று சொல்லும்படி சிறப்புற்றிருக்கும். என்ன வேண்டுமோ அதை அவ்விடத்தில் ஒரு நொடியில் பெற்றுக்கொள்ளலாம். அநேக தேசங்களுக்கு தான்யம் சீரகவல்லியிலிருந்து போகின்றபடியால் நெல்லுமண்டிகள் ஆயிரக்கணக்காய் அவ்வூரில் உண்டு. ஸகலவித தானியங்கள், பாத்திரங்கள், வஸ்திரங்கள், தின்பண்டங்கள், நகைகள் தட்டுமுட்டுகள், பழங்கள், புஷ்பங்கள் நிறைந்த கடைகள், கடைத்தெருவுகள் வெகு விசாலமாய் விளங்குகின்றன. இந்நகரம் வித்தையின் இருப்பிடம். ஸரஸ்வதியின் கணவனுக்கு 4 முகங்களாகையா லிந்த சீரகவல்லியில் தமிழ், ஸம்ஸ்கிருதம், துலுக்கு, அங்கிலேயம் ஆகிய 4 பாஷைகளும் வெகு பிரபல தசையை யடைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாஷையையும் நன்குப் கற்றறியவேண்டிய பாடசாலைகள் பணச்செறுக்குக் கேற்றபடி கட்டப்பட்டிருக்கின்றன. அவ்விடத்தில் என்னதானில்லை. வித்வான்கள் படிக்கவும், வியாபாரிகள் பிழைக்கவும், வேளாளர்கள் வாழவும் குடிகள் செழிக்கவும், நாகரீகம் அதிகரிக்கவும், குணங்கள் படியவும், ராஜாங்கத்தார் செறுக்கடையவும், நல்லோர் வாழவும், தீயோர் மாயவும், நியாயம் நிலைநிற்கவும், தர்மம் தலைதூக்கவும், பிரதான ஸ்தலமாய் இச்சில்லாவின் முக்கிய பட்டணமாக சீரகவல்லி நகரம் விளங்குகின்றது.

மாதர் மித்திரன்.

---

## நமது பார்வைக்கு வந்தபுத்தகம்.

**மாலதி மாதவம்** என்று ஸம்ஸ்கிருதத்தில் **பவபூதி** யெழுதியிருக்கும் நாடகத்தை தமிழில் பொது ஜனங்கள் தெளிவாய் அறிந்துகொள்ளும்படி அந்தக்கதையை வாசகநடையாய் எழுதி ஒரு புஸ்தகம் பிரிசுரிக்கப்பட்டிருகிறது. இதை திருசிராபள்ளியில் ஸம்ஸ்கிருத பண்டிதர் ம-א-א-ஸ்ரீ **சடகோபாசாரியார்** அவர்கள் எழுதியிருக்கிறார். திண்டிவனம் சப்-கலெக்டர் ம-א-א-**ஸ்ரீ வி. வேனுகோபால செட்டி**யாரவர்கள் ஒரு முகவுரையும் எழுதியிருக்கிறார். நமது தேசத்து பாஷைகளுக்கெல்லாம் தாய் பாஷையாகிய ஸமஸ்கிருதத்திலுள்ள கிரந்தங்களை எல்லோரும் அறிய வேண்டியது மிக அவசியம். மேற்கண்ட புஸ்தகம் மிகத்தெளிவான நடையில் எழுதியிருக்

கிறபடியால் எல்லோரும் அதைப்படித்து சந்தோஷிக்கக்கூடும். தவிர கதையும் மிக ஆனந்தமாயிருக்கிறது. மாலதீ என்னும் இராஜகுமாரத்தி தன் தந்தை தனக்கு இஷ்டமில்லாத ஒரு புருஷனைக்கலியாணம் செய்விக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கையில், மாதவன் என்ற இராஜகுமாரனை நேசித்து அவனை காந்தர்வ விவாகம் செய்து கொள்ளுகிறாள். பிறகு இவர்களுடைய சந்தோஷத்துக்கு அநேக இடையூறுகள் நேரிட்டு, பின் அவைகளெல்லாம் ஒவ்வொன்றாய் நீங்குகின்றன. பிறகு அவள் தந்தையும் மாதவனுடைய குணாதிசயங்களை மகிழ்ந்து அவர்கள் விவாகத்தை ஒப்புக்கொண்டு இவர்களையும் ஆசீர்வதிக்கிறான். புத்தகத்தை எல்லாரும் வாங்கி படிப்பார்களென்று நம்புகிறோம்.

## காற்றுக்குழாய்.

சமாசாரங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அனுப்பவேண்டுமானால், அதற்கு மூன்று விதமிருக்கின்றன. அவையாவன; தபால், தந்தி, பேசுந்தந்தி. இவைகளில் முதலிரண்டு எல்லோருக்கும் தெரிந்தவை. மூன்றாவதைக்குறித்து சிலருக்கு தெரியாதிருக்கலாம். அது என்னவென்றால் ஒருஇடத்திலிருப்போர், மற்றோரிடத்திலிருப்போருக்கு தந்திக்குழாய் வழியாய் நேரில் பேசுதல். இதனால் ஒருவர் மற்றொருவரிடத்தில் பேசவும் அவர் உடனே மறுமொழி சொல்லவும் கூடும். இப்படி பேசும் தந்திக்குழாய்கள் நமது இராஜதானியில் சென்னப்பட்டணத்திலிருக்கின்றன. மேற்கண்ட மூன்று விதங்களைவிட சமாசாரம் அனுப்ப இன்னும் சிரேஷ்டமான வழி அமெரிக்கா பட்டணங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கு காற்றுக்குழாய் என்று பெயர். இது எப்படிப்பட்டது என்று நாம் இங்கே ஒருவாறு விவரிக்கக்கூடும். மாதர்மனோரஞ்சனியைப் படிப்போர் அநேகர் பஞ்சு யந்திரங்களைப் பார்த்திருக்கக்கூடும். இந்த யந்திரங்களில் குழாய் வழியாய் பஞ்சு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு காற்றின் விசையினால் போகிறதையும் பார்த்திருக்கலாம். இதேமாதிரி கடிதங்களையும் காற்றின் விசையினால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு, நமது முன்னோர்கள் ரதங்களையும் குதிரைகளையும் வாயுவேகமாயும் மனோவேகமாயும் செலுத்தினார்களென்று புராணங்களில் கண்டிருப்பதுபோல, அமெரிக்கா பட்டணங்களில் அனுப்புகிறார்கள். லண்டன்பட்டணத்திலும்அப்படி செய்யவேண்டுமென்றுஉத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு செலவுக்கு 120 லட்சம் சவரன் வேண்டுமாம் அதாவது 18 கோடி ரூபாய்!

## யுத்தம்.

### ஆங்கிலேயருக்கு ஜெயம்.

நாம் ஜனவரிமீ ப் பத்திரிகையில் யுத்தத்தைப்பற்றி எழுதியிருந்த விஷயத்தை நமது மாதர்கள் படித்திருப்பார்கள். அக்காலத்தில் நாம் போவர்கள் "ஆழம் தெரியாமல் காலிட்டுக்கொண்டோமே" என்ற கதி அடைந்து அகம் குறைந்து, பெட்டிப்பாம்புபோல் ஆய்விடுவார்கள் என்று எழுதியிருந்தபடி கிராஞ்சே என்ற போவர் ஜெனரல் சரணகதி அடைந்த சங்கதியை நமது மாதர்கள் கேட்க அதிக சந்தோஷப்படுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் புளூம்பாண்டினை ஆங்கிலேயர் பிடித்ததையும் அதிக சந்தோஷத்துடன் தெரிவிக்கிறோம். லேடிஸ்மித்து விடுபட்டது. போவர்களும் அதைரியப்பட்டிருக்கிறார்கள். இனி ஆங்கிலேயருக்கு கூடிய சீக்கிரத்தில் ஜயம்வரும் என்பதற்குச் சந்தேசமில்லை. நம்மவருக்கு ஜயமுண்டானதைக் குறித்து இங்கிலாண்டில் ஒவ்வொரு பட்டணத்திலும் சென்ற மாதத்தில் ஜனங்கள் ஒரு விசேஷ திருநாளாகக் கொண்டாடினார்கள். இந்தியாவிலுள்ள நாமும் மிக்க ஆநந்தத்துடன் தேவாமிருதமுண்டவர்போல் களித்திருக்கிறோம். சென்னையில் அநேகர் தெருக்களில் விளக்குகளை ஏற்றியும், ஏழைகளுக்கு அன்னமுமளித்தார்கள். லார்ட் ராபர்ட்ஸும், லார்ட் கிட்செனரும் தைரியத்துடனும், வைராக்கியத்துடனும் போவர்களுடன் யுத்தம் செய்து பஞ்சபாண்டவர்கள் யுத்தத்தில் துரியோதனாதிகளைக் கொன்று வெற்றியடைந்த மாதிரி அதிசீக்கிரத்தில்ஜயம் அடையும்படி ஈசன் அருள்புரிவாராக.

---

## * அம்மானைப்பாட்டு—நாத்தி கொடுமை.

ஒருக்குஞ்சி-யொருக்குஞ்சி ஓரினமாலை
சங்கு கோர்ப்பேன் தாவடங் கோர்ப்பேன்.

தவ்வழகியை வரவழைப்பேன்
இஞ்சி, யிஞ்சித்தோலுரிப்பேன்.

ஈனுவாழையைக் குருத்துரிப்பேன்
கொத்து மஞ்சளை நறுக்கியுரிப்பேன்

கோலப்பதுமையை யாடச்செய்வேன்.
கொல்லையாலே யெங்களண்ணு

குதிரையேறி வாராரென்று
வாசலாலே யெங்கள மதினி

---

* இஃது புதுக்கோட்டை டவுன் சர்க்கார் பெண்கல்விச் சாலையிலிருந்து கிடைத்தது.

வண்டி யேறிவாரா ளென்று
நாத்தனாராத்துக்குப் போனேன்.
தாவாரக்காலோடே சாய்ந்தேன்
யாரது-யாரது என்றாள்
நான்தான் மதினி யென்றேன்.
குளிக்கப்போ குளிக்கப்போ வென்றாள்
எண்ணெய்தா எண்ணெய்தா வென்றேன்
விளக்குக் கசண்டைக்கொடுத்தாள்.
சீயக்காய் சீயக்காயென்றேன்
சீச்சி போபோ வென்றாள்.
மஞ்சள்தா மஞ்சள்தா வென்றேன்
கோரைக்கிழங்கைக் கொடுத்தாள்.
பற்றுது பற்றுது என்றேன்
பற்றும் பற்றும் என்றாள்.
ஏரிக்கரைக்குப் போனேன்
எல்லாப் பேரையுங்கண்டேன்.
ஆற்றங்கரைக்குப் போனேன்
ஐந்தாறு பேரையுங் கண்டேன்.
பரபர வென்றுகுளித்தேன்
சரசர வென்று வந்தேன்.
புடைவைதா புடைவைதா வென்றேன்
பிடி துணியைத் தந்தாள்.
மைதா மைதா என்றேன்
கரியைக்குழைத்துக் கொடுத்தாள்.
குங்குமந்தா குங்குமந்தா வென்றேன்
செங்கற்பொடியைக் கொடுத்தாள்.
சாதம்போடு சாதம்போடு என்றேன்
ஊசல் பழையதை வைத்தாள்.
உப்புப்போடு உப்புப்போடு என்றேன்
உப்பில்லை உப்பில்லை யென்றாள்.
வெற்றிலை வெற்றிலை யென்றேன்
சரகுழகலைக் கொடுத்தாள்.
பாக்குத்தா பாக்குத்தா வென்றேன்
புளியங் கொட்டை ஓட்டைக்கொடுத்தாள்.
சுண்ணாம்பு சுண்ணாம்பு என்றேன்
தோசை மாவைக் கொடுத்தாள்.
ஒரொருகுஞ்சி யென்தோழி நாத்தனார்
ஊசல்பழையதுக்கு உப்பில்லை யென்றாள்.

ஈரொருகுஞ்சி யென்தோழி நாத்தனூர்
ஈரப்புடைவை விழுக்கொட்டேனென்றாள்.

மூவொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
முத்தும்பவழமும் கோக்கொட்டேனென்றாள்.

நாலொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
நாவற்பழத்துக்கு நெல்லில்லையென்றாள்.

ஐந்தொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
மஞ்சள் பூசிக்குளிக்கொட்டேனென்றாள்.

ஆறொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
கூறையுடுத்திக் குலாவகொட்டேனென்றாள்.

ஏழொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
எண்ணெய்தேய்த்து முழுகொட்டேனென்றாள்.

எட்டொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
கொட்டங் கூடங்களைக் கூட்டிவாவென்றாள்.

ஒன்பதொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
ஓலையிட்டால் காதையறுப்பாள்.

பத்தொருகுஞ்சி என்தோழி நாத்தனூர்
பாலன்னஞ் சாப்பிட்டால் பல்லையுடைப்பாள்.

என்னடிசெய்வேன் என்தோழி! நாத்தனூர்
ஈவதிரக்கம் இல்லாமலிருக்கிறாள்!

# NEWS & NOTES.

லண்டனில் பகல் 12-மணியாயிருந்தால் பின்வரும் ஊர்களில் அப்பொழுதிருக்கும் மணியைத் தெரிவிப்போம்:—

| | | |
|---|---|---|
| பம்பாய் ... ... ... | மாலை | 4 - 51. |
| மதிராஸ் ... ... ... | ,, | 5 - 20. |
| கல்கத்தா ... ... ... | ,, | 5 - 53. |
| அமெரிக்காவிலுள்ள வினிப்பெக் | காலை | 5 - 32. |

நியூவெனந்திலாந்திலுள்ள ஸெயின்ட்ஜானில் காலையில் 8 அடித்து 32 நிமிஷமாயிருக்கும்.

நியூவெளந்திலாந்து அமெரிக்காவுக்குக் கிழக்கில் அங்கிலேய ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒவ்வொரு ஊரிலும் ஒரே காலத்தில் அதே மணியாய் இருக்காது. அப்படி ஒரே காலத்தில் முப்பது ஊர்களில் உள்ள மணியைத் தெரிவிக்கும் கடிகார மொன்று ருஷிபாவில் ஸென்ட்பீடர்ஸ்பர்க் என்னும் பட்டணத்திலிருக்கிறது. அதற்கு 95 முகங்களிருக்கின்றன. அது (Switzerland) சுவிட்ஸர்லேண்டில் பண்ணப்பட்டு ஸென்ட்பீடர்ஸ்பர்க்குக்கு அதைப் பிரித்து அனுப்பினார்கள். அப்படிப் பிரிக்கப்பட்ட கடிகாரத்தை ஒன்றாக வைத்துச் சரியாக்க இரண்டு வருஷங்கள் பிடித்தன

வாம். இப்பொழுது அமெரிக்காவில் ஆபீஸ் கட்டடங்களை 15 முதல் 24 அடுக்கு மெத்தைகள் வைத்துக் கட்டியிருக்கிறார்கள்.

---

இரநூறு வருஷங்களுக்கு முன் ஜெர்மனிதேசத்துக் கடிகாரம் பண்ணுபவன் சாவிகொடுக்காமல் 28-நாள் செல்லும்படியான கடிகாரம் பண்ணினான் அது நூரம்பர்க்கின் பலபொருட் காட்சிசாலையிலிருக்கிறது. (Hampton court) ஆம்ப்டன் கோர்ட்டு என்னு மரண்மனையில் ஒருதரம் சாவி கொடுத்தால் மறுபடி தொடப்படாமலே ஒரு வருஷம் செல்லும்படியான கடியாரமிருக்கிறது. இப்பொழுது அமெரிக்காவிலுள்ள ஒருவர் ஒரு கெடிகாரம் செய்திருக்கிறார். இதற்கு நூறுவருஷம் சாவி கொடுக்காமலே இது ஓடிக்கொண்டிருக்கும். இதற்கு காந்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒருக்கால் இதன் சக்தியினாலும் செய்தவரின் புத்திசாதுரியத்தினாலும் இது இப்படியமைந்தது மிக மெச்சத்தகுந்ததே.

---

மார்ச்சுமீ 16உல் வாலாஜ நகரிலுள்ள கவர்ன்மெண்ட் பெண் பாடசாலையிலுள்ள பெண்களுக்கு பரிசு அளிக்கப்பட்டது. ம-ா-ா-ஸ்ரீ சப் ரிஜிஸ்டிரார் தேசிகா சாரியார் சபைத்தலைவராக வீற்றிருந்தார். கல்வியைப்பற்றியும், கற்பைப்பற்றியும் தெலுங்கிலும் தமிழிலும் ம-ா-ா-ஸ்ரீ லக்ஷ்மி நரசு அவர்களாலும், மாதுஸ்ரீ S. நாகம்மாளவர்களாலும் உபந்நியாசம் செய்யப்பட்டன. பின்பு பெண்கள் கோலாட்டமும் கும்மியும் அடித்தபின் சபைகலைந்தது.

---

சென்ற வருடம் சென்னையில் நடந்த பிரைமரி பரீக்ஷையில் 143 - பெண்கள் தேறியிருக்கிறார்கள். இதில் 7-பேர்கள் முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்கள். மைலாப்பூரிலுள்ள விஜயநகரம் பெண் பாடசாலையில் ம-ா-ா-ஸ்ரீ டி. எம். சேஷகிரி சாஸ்திரியாரின் குமாரத்தியாகிய வெங்கிடலக்ஷ்மி யம்மாளும் பட்டணத்திலுள்ள விஜயநகரம் பெண் பாடசாலையில் 3-பெண்களும் இப்பரிட்சையில் தேறியிருக்கிறார்கள். திருவல்லிக்கேணியிலுள்ள விஜயநகரம் பெண் பாடசாலையிலிருந்து ஒரு பெண்கூட இப்பரிட்சைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. இதுமிக்க விசனிக்கத் தகுந்ததாயினும் இவ்வருஷத்திலாவது சில மாணவிகளை இப்பரீட்சைக்குத் தயார்செய்து அனுப்புவார்களென நம்புகிறோம்.

7 - மகமதியப்பெண்கள் இப்பரிட்சையில் தேறியிருக்கிறதைக் கேட்க மிக சந்தோஷப்படுகிறோம். மகமதியர்கள் தங்கள் குமாரத்திகளுக்கு கல்வி புகட்டிவருவது மிக மெச்சத் தகுந்ததே.

---

மார்ச்சுமீ 19உல் சாயங்காலம் ராயப்பேட்டையிலுள்ள கவர்ன்மெண்ட்டிரெயினிங் பெண் பாடசாலையில் பரிசு அளிக்கும் வருஷோற்சவம் நடந்தது. அக்காலத்தில் நமது கனம் கவர்னரவர்களின் மனைவியார் அக்கிராசனம் வகித்தார். ரிபோர்ட்டு வாசிக்கப்பட்ட வுடன் மிஸ்ஸஸ் R. S. பென்சன் அவர்கள் , கம்மதிய மாதர்கள் கற்கமுயல்வதைப்பற்றியும், அவர்களில் 5000-பேருக்கு சுமார் 500-பெண்கள் தான் சென்னையில் படித்து வருவதைப்பற்றியும், இப்பாடைசாலையை இன்னும் விருத்திசெய்ய மகமதிய கனவான்கள் முன்னுக்கு வரவேண்டுமென்பதைப் பற்றியும் சொன்னார். பின்பு சுமார் 50 பெண்களுக்கு பரிசு எச். இ. லேடி ஹாவலக் துரைசானியாரால் அளிக்கப்பட்டது. முதல் வெகுமதி ஆர்காட்டு நவாபு அவர்களின் குமாரத்தியால் அனுப்பப்பட்டது. பின்பு சபைகலைந்தது.

---